
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1319**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்




## லண்டன் பயணத்தில் மர்மம் ஏன்?

'முதலமைச்சர் என்ன வேலைத் திட்டத்துடன் இலண்டன் சென்றுள்ளார் என்பதே மர்மமாக உள்ளது' எனக் கேள்வி எழுப்பியுள்ளார், அரசியல் விமர்சகர் சத்தியராஜ். அவரது பதிவிலிருந்து...

"காலம் காலமாக முதலமைச்சர்கள் முதலீட்டை ஈர்ப்பதற்காக வெளிநாடுகள் செல்லும்போது, அவர்களுடைய ஒட்டுமொத்தப் பயணம் குறித்தும் விரிவான செய்திகள் ஒரு வாரத்துக்கு முன்பே வெளிவந்துவிடும். 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ஆம் தேதி, ஸ்டாலின் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் புறப்படுவதற்கு முன்பு, அதாவது ஆகஸ்ட் 25-ஆம் தேதி, அவருடைய ஒட்டுமொத்தப் பயணத் திட்டங்களும் வெளியானது. ஒவ்வொரு நாளும் அவர் அங்கு யாரைச் சந்திக்கிறார், என்ன நிகழ்ச்சி என்பதை முன்கூட்டியே அறிவித்தனர். ஆனால், விஜய் அவர்களுடைய வெளிநாட்டுப் பயணம் குறித்து வெளியான மூன்று பக்க அறிக்கையில், 10-ஆம் தேதி சென்னையில் இருந்து புறப்பட்டு, 17 -ஆம் தேதி திரும்புகிறார்" என்று மட்டும் உள்ளது.

ஒவ்வொரு நாளும் யாரைச் சந்திக்கிறார், எங்கு பேசுகிறார், எந்த நிறுவனத்துடன் ஒப்பந்தங்கள் போடுகிறார் என்பது குறித்து எதுவுமே இல்லை. தொழில் முதலீட்டுக்குப் போகக்கூடிய முதலமைச்சர், தமிழ்நாட்டு தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா அவர்களைத் தவிர்த்துவிட்டு, விஷ்ணு ரெட்டி மற்றும் மேகநாத ரெட்டி ஆகியோரை எதற்கு தன்னுடன் அழைத்துச் சென்றார். முதலீடு தமிழ்நாட்டுக்கா இல்லை ஆந்திராவுக்கா... யார் இந்த விஷ்ணு ரெட்டி? தமிழ்நாடு அரசின் அனைத்து கேபினட் கூட்டங்களிலும் இவர் கலந்துகொள்கிறார். இவருக்கு அதிகாரபூர்வமாக என்ன பதவி கொடுக்கப்பட்டுள்ளது? அது குறித்து அரசாணை எங்கே? இவரை விமான நிலையத்தின் வி.வி.ஐ.பி (VVIP) நுழைவாயிலின் உள்ளே அனுமதிக்காததால், தனது நண்பருக்காக முதலமைச்சர் புரோட்டாகாலை மீறி, எதற்காக மக்கள் நுழைவாயிலில் சென்றார்?

ஹெச்.டி ஹூண்டாய் (HD Hyundai) நிறுவனம், ரூ. 38 ஆயிரம் கோடி கப்பல் கட்டுமானத்தைத் தூத்துக்குடிக்குக் கொண்டுவருவதற்காகக் கடந்த அரசு மிகப்பெரிய வேலைகளைச் செய்தது. ஆனால், இப்பொழுது, அந்தத் திட்டம் காக்கிநாடாவுக்குப் போகப்போகிறது என்று 'தி எக்கனாமிக் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. அதன் உண்மை நிலவரம் என்ன? குறிப்பாக, என்ன வேலைத் திட்டத்துடன் இவர்கள் லண்டன் பயணத்தை முடிவுசெய்தார்கள்? ஏன், லண்டன் பயணத்தை மர்மமாக வைத்திருக்கிறார்கள்" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரிடம் வாழ்த்துப் பெற்றேன்!



சி.அமலதாஸ்

2018-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் தேதி, எனது 50-வது பிறந்தநாளின் போது, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை மனைவி மற்றும் மகளுடன் சென்று, அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது, தமிழினத்தின் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர், பார்வையாளர்களைச் சந்திக்காமல் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நேரம் என்பதால், வாழ்த்துப் பெற முடியவில்லை. ஆனால், தளபதி அவர்களைக் குடும்பத்துடன் சந்தித்து வணங்கி வாழ்த்துப் பெற்றது, மகிழ்ச்சியான நாளாக அமைந்தது.

- சி.அமலதாஸ்,
வட்டத் துணைச் செயலாளர், 176-வது வட்டம்,
வேளச்சேரி மேற்குப் பகுதி, சென்னை தென்கிழக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com


# தி.மு.க.வும் நெருக்கடி நிலையும் - ஷா கமிஷனும்!



● இந்திரகுமார் தேரடி

நெருக்கடி நிலையின் கொடூரமான அடக்குமுறையின் முழுப் பாதிப்பையும், தி.மு.க.வும் தி.க.வுமே அனுபவித்தது என்றும், கைதுக்கான ஆவணங்களைக் காவல் துறையினர் அரசுக்கு அனுப்பக்கூட இல்லை என்றும், 'ஷா கமிஷன்' தமிழ்நாட்டில் கைது நடைபெற்ற விதம் குறித்து குறிப்பிட்டுள்ளது.

இன்று தடுப்புக்காவல் அறிக்கையைக் கேட்டும், ஷா கமிஷனில் பெயரைக் கேட்டும் சவால்விடும் பேர்வழிகள், ஷா கமிஷன் அறிக்கையைப் படிக்காமலே, சவால்விட்டு வருகின்றனர்.



*"19.291 ...THE SPATE OF DETENTIONS OF POLITICAL PARTIES STARTED IMMEDIATELY AFTER THE IMPOSITION OF THE PRESIDENT'S RULE IN THE STATE AND THE ERSTWHILE RULING PARTY . I.E THE DMK HAD TO BEAR THE BRUNT OF MISA ONSLAUGHT FOLLOWED BY THE DRAVIDAR KAZHAGAM (35)."*

"19.291 ...மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்ட உடனேயே, அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தடுப்புக் காவலில் வைக்கப்படும் நடவடிக்கை தொடங்கியது. அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க.வே MISA-வின் கொடூரமான அடக்குமுறையின் முழுப் பாதிப்பையும் முதன்மையாகச் சுமக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து திராவிடர் கழகத்தினரும் (35)."

"19.292 ...பல வழக்குகளில், மேற்கூறிய ஆவணங்களுக்கு மேலதிகமாக "வேறு எந்த ஆவணத்தையோ அல்லது ஆதாரப் பொருளையோ மாவட்ட ஆட்சியர்கள் அனுப்பவில்லை" என்பது தெரியவந்தது. மேலும், தடுப்புக் காவலுக்கான காரணங்களை உள்ளடக்கிய "காவல் கண்காணிப்பாளரின் (SP) அறிக்கையின் நகல்கூட மாநில அரசுக்கு அனுப்பப்படவில்லை." இவையெல்லாம் ஷா கமிஷன் அறிக்கையிலேயே பதிவாகியுள்ளன.

ஷா கமிஷனில் பெயர் இருக்கிறதா என்று கேட்பவர்களே... அவ்வறிக்கையில் மறைந்த சிட்டிபாபு, வி.பி.சிந்தன், ஆசிரியர் வீரமணி ஆகியோரின் பெயர்கள்கூட இல்லை. ஏன், கைதுசெய்யப்பட்ட 419 தி.மு.க.வினர் பெயர்களும்கூட பட்டியலிடப்படவில்லை. சில DISTRICT MAGISTRATEகளின் அடாவடித்தனங்களே பதிவாகியுள்ளன. அதிலும் தி.மு.க.வினரும் தி.மு.க.வோடு தொடர்பில் இருந்ததாகக் கருதப்படுவோரும் எந்தக் குற்ற ஆதாரங்களும் இன்றி, மிசாவில் கைதுசெய்யப்பட்டதை வேதனையோடு ஷா பதிவுசெய்துள்ளார்.

அடக்குமுறைக்கு எதிரான தி.மு.க.வின் வரலாற்றைச் சிலர் மறைக்கப் பார்க்கிறார்கள். சூரியனைத் திரைபோட்டு மூட இயலாது. கண்ணை மூடிக்கொள்வதால், சூரியன் மறையாது. ■

## நம் வரலாறு

### கலைஞர் - என்.வி.என். கைது!

1963-ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி, இந்தித் திணிப்புக்கு எதிராக மதுரையில் நடைபெற்ற சட்ட எரிப்புப் போரில் கலந்துகொண்டு சென்னை திரும்பிய கலைஞரை, 19.12.1963 அன்று பகல் 12.30 மணிக்கு காவல் துறை அவரது இல்லத்தில் கைதுசெய்தது. மதுரையிலிருந்து வந்த போலீஸ் அதிகாரிகள் அவரைக் கைதுசெய்தனர். அதே நாளில், என்.வி.நடராசன் இல்லத்திற்குச் சென்று, அவரையும் கைதுசெய்தது போலீஸ். பின்னர், இருவரும் அன்றிரவு இரயில்மூலம் மதுரை கொண்டுசெல்லப்பட்டு, நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900